# இன்னொரு ஜனனம்



அம்பலவன் புவனேந்திரன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாசித்தீர்களா..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு ஜன்னல்

அம்பலவன் புவனேந்திரன்...

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவுப்பதிப்பு மார்கழி .98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி...

இந்நூலுக்கு அணிந்துரை எழுதிவழங்கிக் கௌரவமளித்த, என்மதிப்பிற்குரிய திரு.ஆறுமுகம் (நவம்) ஆசிரியர் அவர்களுக்கும்....

என்கவிதைகள் நூலுருவில் வெளிவரவேண்டுமென்பதில், என்னைவிட ஆர்வம்காட்டி அவ்வப்போது அறிவுரைநல்கிவருகின்ற என் மரியாதைக்குப்பாத்திரமான கவிஞர் முகில்வாணன் அவர்கட்கும்....

எனது கவிதைத்தொகுப்புகள் பொருளாதார நெருக்கடிகளால் தாமதமாகிக்கொண்டிருந்தவேளை இந்நூல், விரைவில் வெளிவருவதற்குத் தன்னால்-இயன்ற உதவிகள்புரிந்த திருபி.ஆர்.சிறீஸ்கந்தராஜா அண்ணன் அவர்களுக்கும்....

இந்நூலைப் பதிப்பதற்கு, தன் பிரதியியந்திரத்தினைத்தந்துதவிய நண்பர் திரு.சபேசன்(ஓபகௌசன்) அவர்களுக்கும்....

எனக்கு, அவ்வப்போது உதவிகளும் உரிய-வேளைகளில் ஆலோசனைகளும் வழங்கி இந்நூலை உருவாக்குவதற்குப் பொறுமையுடன் என்னோடுபணியாற்றிய திருமதி. சுலோசனா புவனேந்திரன் அவர்களுக்கும்....

கடிதங்கள் மூலமாகவும் தொலைபேசிவாயிலாகவும் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்த அன்புசால் அனைத்து இதயங்களுக்கும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை.

கவிஞர் அம்பலவன்புவனேந்திரனின் **இன்னொரு ஜனனம்**-பார்த்தேன்...
கவிதைகளைப் படித்தபோது நான்கூட இன்னொரு ஜனனமெடுத்தேன்.
ஒவ்வொரு கவிதையிலும் ஒவ்வொருபுதுமை...
மொத்தம் நாற்பத்திமூன்று கவிதைகள்.
என் நன்றிகள் —என்ற காப்புக்கவிதையோடு கவிதைகள் மலர்கின்றன...
காப்புக்கவிதையில் கவிஞரின் கடவுள்நம்பிக்கையும் ஆத்மீகஅழுத்தமும்தெரிகின்றன.
பொருளுக்குள் பொருளாகி, சொல்லுக்குள் பொருளாகி
என்றஅடிகள்மூலம் இறைவனுக்கு இலக்கணம் அடையாளம் காட்டுகின்றார்...
அடுத்துவரும் தூரத்துத்தண்ணியில் அம்மாவை ஏங்குகிறார். அந்த ஏக்கம் அவருக்குமட்டுமல்ல நமக்கும்கூடத்தான்...!

விருந்துக்கு உன்முன்னே
பிந்திவரும் பிள்ளையிவன்
மருந்துகொண்டு—இன்று
உன்னிடம் வரமுடியவில்லையே...

என்றவரிகள் அழவைக்கின்றன...
தந்தையுடனான ஒருவகைத்தோழமையின் புனிதத்தை குருபிரம்மா —சொன்னால் தாயகத்தின் தாகத்தை குளிர் —சொல்லுகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் தாக்குப்பிடிக்க—என்தேகம்
தாங்காது தாயே..!
நான் என்தாயகத்துக்கு
அடுத்தாண்டில் தாவிவிடுவதாய்
முடிவாகவுள்ளேன் தாயே...

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள எல்லோருடையதாகமும் இதுதான்...

தவழ்துவரும் தென்றலதைநுகர்ந்து
தளர்ந்துமிதந்து நானுமின்று மீண்டேன்—நேரில்
தவழ்துஎழுந்து நடைபயிலும்பிள்ளை
வளர்ந்துவந்து எனைமீட்கும்நாளை...

என்பிள்ளை —கவிதைமூலம் நமக்கெல்லாம் எத்தனைநம்பிக்கையை ஊட்டுகின்றார் கவிஞர். போராளி —கவிதையில்சொல்லும் நக்கல் நமையெல்லாம் இனவிடுதலைக்குத் துரத்துகிறது... பாதைகள் வேறு —என்னசொல்கிறது..? தூயகாதலின் புனிதத்தைப் படம்பிடித்துக்காட்டுகிறது.

கூடியோடி விடுவோமென்றுன்னை
கூப்பிட்டழைக்கவில்லையம்மா
ஆவணியில் நாள்பாரென்று—உன்
அப்பனிடம் சொல்லத்தான் அழைத்தேனடி...

குருதி ஜாதியில் —குடிபெயர்ந்துவாழ்வோர் பற்றியகவலைகள்...

சேற்றில் செந்தாமரை—
வாஸ்தவம்தான்
இங்கே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொஸ்னியாவில்
இடிபாடுகளுக்குள்ளும்
செந்தாமரைகள்...
நீரில்லை ஊணில்லை-
நிலையான இடமில்லை
நித்தம் நித்தம்
இடம்பெயர்வுகள்...

இப்படியாக, கவி உள்ளத்திலிருந்து வெடிக்கும் ஒவ்வொருகவிதையிலும் பூவின்மென்மையும் புயலின்வேகமும் தீயின்சுவாலையும் மின்னுகின்றன...

'ஒருபாடலில் மொழியும் இசையும், வானமும் நீலமும்போலக்கலந்திருக்கவேண்டும். அல்லது இசையில் பசுமைபோல இழைந்திருக்கவேண்டும். அப்போதுதான் அது முழுமையான பாடலாகும்...'

கவிஞர் வைரமுத்துவின் இந்தஅடையாளங்கள் முற்றுமுழுதாக **இன்னொரு ஜனன**த்தில் விரவிக் கிடக்கின்றன.

கவிதைகளைப் படியுங்கள் புரியும்...

நவம்-

8, நாராயணபுரம் இரண்டாம் தெரு
சூளைமேடு
சென்னை-94.
25.12.98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உங்களுடன்...

இன்னொருமுறை இனியவணக்கங்கள் உங்களுக்கு...
இந்தப் பிரபஞ்சச்சுற்றில் மீண்டும் உங்களைச்சந்திப்பதில்
உள்ளம்நிறைய உவகைகொள்ளுகிறேன்...
உங்களைப்போல், நம்சமூகத்தில் சுத்தானமாற்றம்வேண்டி
உள்ளத்தில் உந்துதல்கொண்டே இந்தப்பறவைபாடிவருகிறது
பொன்னின்மேலாம் பொழுதுகளைப்போக்கி—இந்தச்
சின்னப்பறவையின் பாடல்களைச் செவிமடுக்கவும்
சிறப்பாய் உங்கள்கிளைகளில் அமர்ந்திடவும்
திறந்தமனதோடு அனுமதியளித்த அனைத்துஇதயங்களுக்கும்
இந்தப்பறவை அன்போடு அடிபணிகிறது...
**இன்னொரு ஜனனம்** எடுத்து இம்முறைவந்தேன்
இடர்கள்பலகடந்து இங்குவந்துசேர்ந்தேன்
கன்னல்மொழிக் கவிபடைத்திடாதபோதும்—இதனைக்
கவனமெடுத்துக் கேட்டிட்டால் மிகமனம்மகிழ்வேன்...
அன்றொருதடவைபாடிய **கவிஞன்** பாடல்கள்பற்றி
அவ்வளவாய் நீங்கள் கவனமெடுக்கலைபோலும்...
தூற்றுவார் வழமைபோல் தூற்றியேபோகட்டும்
போற்றுவார்பலரேனோ மௌனித்துப்போனார்—
பாராட்டுதல்யாவும் பாங்கானவிமர்சனமாமோ...?
மாற்றமேதும்வேண்டின் மனம்திறந்துசொல்வீர்
மற்றவை எதுவாயினும் மனமொத்துவரைவீர்
பெற்ற ஓலைகளில் பெரிதான புகழுரைதான்
பேரளவில் திருப்தியே — போதைதான்வந்தது...
பேரெடுத்த **தீயின் வார்ப்புகள்** சின்னவர்சிலரைச்சுட்டன
பேரேதும்சொல்லாமல் பெரிதாய்த்திட்டியதால் தீவிரமானேன்
சிறிதாய்குறைகளைச்சொன்னது —தீவனமாகியது எனக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தம்சொன்னது சிறியபறவைக்கு முழுமாத்திரையல்ல
சிறியசிறகுகளுக்குஅவை வைட்டமின்மாத்திரைகளென்பதை
சிறியவர்சிலரறிந்து வெட்கத்தால்மௌனித்தார்...
மருந்துகளே இப்பறவைக்கு விருந்துகளானாலும்—இம்முறை
விருந்துகளில்லாவிடிலும் இதயவிருச்சங்களையேதேடுகிறது...
விரும்பிப்பாட்டிசைக்கவும் வெளியுலகில்பறந்திடவும்
விலாசமானஇதயங்களின் ஆதரவுக்காற்றை நாடிவருகிறது...
சுகமாகச்சுவாசித்திடவும் சுருதிகூட்டிப்பாடிடவும்—அந்த
சுந்தரஉள்ளங்களின் ஆதரவை அனுதினமும் எதிர்பார்க்கிறது...
இடியோமழையோ எதுவரினும்எதிர்த்துநின்று—உங்களுடன்
**முடிவல்ல ஆரம்பம்** இதுவென்றுமுழங்கிடுவேன்...
பிடிப்போடும்துடிப்போடும் பறந்துவருவேன்—நீங்கள்
படித்ததைப்பண்பாய்ப் பகிர்ந்துகொண்டால்மகிழ்ந்திடுவேன்...

**அம்பலவன்புவனேந்திரன்..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை...

இந்நூலை உருவாக்கிய -
என்னை உருவாக்கிய
அன்னை தந்தை மற்றும்
ஆசான்களின் திருப்பாதங்களுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நன்றிகள்.

உருவாகி இலததாகி
உலகத்தை இயக்குபவனே—என்னை
கருவிலே சுமந்திட்ட அன்னைபோல்
காலமெல்லாம் தாங்கிநிற்கும்
கருணையின் வடிவே
உனக்கு என்நன்றிகள்.

பொருளுக்குள் பொருளாகி
புவியினைச் சுற்றவைக்கும்—புண்ணியனே
இருளுக்குள் ஒளியாகியெங்கும்
இடர்நீக்கி சுடர்நீட்டி
எனையாட்கொண்டவனே
உனக்கு என்நன்றிகள்.

சொல்லுக்குள் பொருளாகி
சோர்வகற்றும் வல்லவனே—என்னை
கொல்லும் வினையகற்றி
கோலோச்சி பேரெடுத்து
வாழவைக்கின்ற கோமகனே
உனக்கு என்நன்றிகள்.

அன்னைக்கும் தந்தையும்
ஆருயிர்ப் பிள்ளையாய்—என்னை
அவதரிக்கச்செய்த அருமருந்தே
மண்ணுக்கும் விண்ணுக்கும்
பாலமமைத்த மறையோனே
உனக்கு என்நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மைக்கும் மறுமைக்கும்
இடையினிலே இயங்குகின்ற—இன்பமே
இன்றுபோல் என்றுமெனை
என்அன்னைக்கும் தந்தைக்கும்
மகனாகப் பிறக்கச்செய்வாய்
மால்மருகா முருகா..!

## தூரத்துத் தணீணி.

என்னவினை செய்தாயோ
என் அன்னையே..?
முன்னம் செய்தவினையிதுவோ
நானறியேன் தாயே..
விதியின் வினையோ
என்றறியேன் நானே..
என்னை அணைத்தெடுத்து
மகிழ்ந்த உன்கரங்கள்
இன்று என்னவானதம்மா..?
என்னை அழைத்து—
அமுதூட்டிப் பார்த்தகைகள்
ஏன் தளர்ந்துபோனதோ..?
எனை வருடியன்று—
தலைசீவிய விரல்கள்
ஏன் உணர்வற்றுப்போயினவோ..?
என் விரல் பிடித்து—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சுவடி வரைந்த
உன் விரல்களுக்கின்று
ஏதுபிழை வந்ததம்மா..?
விதியின் விளைவால்
உனைப்பிரிந்து வந்தேனா..?
விருப்பப்படாமல்—அன்று
எனை அனுப்பிவைத்தாயே..
சதிகாரர் செய்திட்ட
வினையை எண்ணி—
சஞ்சலம் கொண்டு
இடறி விழுந்துவிட்டாயா..?
விருந்துக்கு உன்முன்னே
பிந்திவரும் பிள்ளையிவன்
மருந்துகொண்டு—இன்று
உன்னிடம் வரமுடியவில்லையே..
என் விழிகளுக்கு
எட்டாமல் நடந்தவற்றை
எண்ணியெண்ணி—என்மனம்
வெதும்பி வேகும்தினம்..
எழுத்துக்குள் அடங்கிடாத
ஏக்கங்களும் விம்மல்களும்
எழுந்து நித்தம் மடிவதை
எப்படி உனக்குச்சொல்வேன்..?
என் இதயமது—
கருகிச் சருகாவதற்குள்
உன்னிடம் ஓடிவருவேன்..
நான் தவழ்ந்த மடிமீது
தலைசாய்த்தாலே—இந்த
தாளாதசோகம் தீருமம்மா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பிரம்மா.

கண்களுக்குள்
காந்தங்களை மறைத்திருக்கும்
கள்வன் நீ..
விசுவரூபத்தை
வெளிக்காட்ட
விருப்பப்படாதவன் நீ..
வசீகரவார்த்தைகளை
வசமாக்கிக்கொண்டவன்
எனக்குத்தெரிந்தவரை
நீமட்டும்தான்..
அதனால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரும் நினைவுகளை
மறக்கமுடியவில்லை—
உன்னால்..
பலருக்குக் கற்றுக்கொடுத்த
ஆசான்தான் நீ..
கற்றுக்கொள்வதை விட
கற்றுக்கொடுப்பதில்
களிப்புக்கொள்பவன் நீ..
உலகம் உனக்குப்
பல சங்கதிகளைப்
பாடமாய்ப் புகட்டியிருந்தும்
சில இடங்களில்
சிறிது சிறிதாய்
ஏமாந்துபோனாயல்லவா..?
கொடுப்பதைத்தான்
சிந்திப்பாய் —நீ
கொடுத்ததை எடுக்க
இதுவரை கொஞ்சமும்
கற்றுக்கொள்ளவில்லை..
நம்பிக்கையில் மட்டும்
தீவிர நம்பிக்கை
கொள்பவன் நீ..
அசப்பில் சிறுபிள்ளை
பிறரை அசத்துவதிலும்
மயக்குவதிலும் மந்திரவாதி நீ..
தோளுக்கு வளருமுன்னே
என்னோடு தோழனாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகியவன் —நானறிந்தவரை
நீ ஒருனாகத்தான்
இருக்கமுடியும்..
அதனால்தான் —
சினிமாக்களுக்குக்கூட
இருவரும் சேர்ந்தேபோனோம்..
பிறரை ஏமாற்றத்தெரியாதுனக்கு
அதனால்தானோ என்னவோ
ஏமாற்றங்களை
எகிறிவிடுகின்ற
எம்புகொலை இறைவன்
உனக்கு மட்டும்தந்தான்..
உன்னிடம் நான்
கற்றுக்கொண்டவை
ஏராளம் ஏராளம்..
ஏன் —இன்னும்
கற்றுக்கொண்டுதானே —
இருக்கின்றேன்..
நீ பிரம்மன்தான்....!
உன்னை —
குரு என்றுசொல்லவே
இந்தக்குழந்தை ஆசைப்படுகிறது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்..

எப்படி உன்னிடம்
எடுத்துச்சொல்வேன்..?
என்னிடம் வாராதே—
விலகிப்போய்விடு..!
துயில்வந்து
விழிவாசல்தன்னை
மூடிடும் வேளை
தூங்கவிடாமல்
தொந்தரவு செய்கிறாய்..
எவ்வளவு ஆத்திரம்எனக்கு
பொறுமையை இழந்து
புழுங்கித் தவிக்கிறேன்..
என்னிடம் வராதே
எட்டிப்போய்விடு..!
கண்டகண்ட இடங்களில்
கட்டித்தழுவுகின்ற
மேல்நாட்டு மாந்தர்போல்
என்னைத்தொட்டுதொட்டு
தொடர்ந்து வந்து
கட்டிக்கொள்வது—எனக்கு
கடுகளவும் பிடிக்காது..
வெளியில் நின்று
வேலை செய்யலாமென்றால்
நீயேநிதம் வந்து
வாட்டி வதைக்கின்றாய்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் காலங்களில்
வெட்கப்கட்டு ஒளிகிறாயா..?
இங்கே
காலகாலமாய்—உன்
கைவரிசையைக் காட்டாது
உல்லாசமாய் உன்விருப்பம்போல்
வேறுதேசம்போய்
வரண்ட தேகங்களுக்கும்
உன் வதனத்தைக்காட்டு..
உன்னால் எனக்கு
நடுக்கத்தால் வந்தபயமேதவிர
பயத்தால் வந்தநடுக்கம்—
கிடையவே கிடையாது..
நீ நகரமாட்டாய்—
அது எனக்குத்தெரியுமடி..
இங்கே
உன் தொல்லைகளால்
துவண்டு போனேன்..
இனியும் தாக்குப்பிடிக்க
என்தேகம்
தாக்குப்பிடிக்காது தாயே..
நான் என்தாயகத்துக்கு
அடுத்தாண்டில் தாவிவிடுவதாய்
முடிவாகவுள்ளேன் தாயே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பிள்ளை.

என்கனவுவொன்று நனவாகும்வேளை
எழுந்துவரும் தங்கமணித்தேரே—அது
பொன்வண்ணக் கரங்களினால் நாளை
பொழுதெல்லாம் கவியெழுதும் நேரே.

நாளும்நாளும் நான்எழுதும் பாடல்
நாளாக இசையோடு கூடும்—மெல்ல
நானதனை அரங்கேற்றிப் பாடும்
நாளதனை என்னுள்ளம் தேடும்

தவழ்ந்துவரும் தென்றலதை நுகர்ந்து
தளர்ந்துமிதந்து நானுமின்று மீண்டேன்—நேரில்
தவழ்ந்து எழுந்து நடைபயிலும் பிள்ளை
வளர்ந்து வந்து எனைமீட்கும் நாளை.

குழல்சுரக்கும் இனியநாதம் வந்து
குயில்பாட்டை நினைவூட்டிச்செல்லும்—பெற்ற
மழலைமொழி கேட்டுக்கிறங்கும்போது
மகிழ்ச்சியும் தன் எல்லைதனை வெல்லும்

அறுசுவை உண்டியுடன் பழம்பால்
அத்தனையும் புசித்துபருகி ருசித்தேன்—நான்
பெறும்பிள்ளை அழைந்திட்டகூழைப்
பெற்றுச்சுவைத்து மேலும்மேலும் களிப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பிள்ளையிவன் எனப்பேசவைப்பேன்
எழுந்துவரும் சிங்மாக்கி முடிப்பேன்—என்றும்
என்னைப்போல் எழுதிக்கொண்டிருந்திடாமல்
எட்டுப்படி மேல் இருந்திடச்செய்வேன்.

## போராளி..

ஆயுதம் தரித்த—
உன்னை நான்பார்த்தேன்
உள்ளங்கை வேர்த்தது..
பொன்னுமில்லை பூவுமில்லை
பொட்டோடு கட்டுக்கூந்தலில்லை..
புதுமைப் பெண்ணாகப்
புறப்பட்டதால் பூரித்தேன்..
சீருடையில் சிங்கமாயிருந்தும்
சிறுபுன்னகை பூத்தாய்—
நட்பின் அடையாளம்கண்டேன்..
அது —ஒருவேளை
நக்கலாக இருக்குமோ..?
' நீ தாயகவிடுதலைக்கு
தகுதியில்லாதவன்—என்று..'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதைகள் வேறு.

நெஞ்சில் உறக்கமே போனது
நினைவுகளின் கிறக்கம்தான்
வஞ்சியுன் வாய்வார்த்தை—எனை
வாட்டி வதைக்கிறது காண்.

பழிசொல்லத்தெரியும் வாய்களுக்கு
பாவம் இதுவென்று தெரியாதோ?
வழிசொல்லத் தெரியாத ஊரில்—எனக்கு
வாழ்ந்து பார்க்கவும் தெரியவில்லை.

அஞ்சியிங்கு தனியாய் ஓடிவந்தேன்
அனுதினமும் உனையே நினைத்து
பிஞ்சிலே பழுத்தபழம் போல—நான்
பிரயோசனமற்றுப் போனேனடி.

சங்ககாலம் உடன்போக்கைக் கூட
சகசமாய் அங்கீகரித்ததையறிந்தோம்
எங்கள்காலமோ காதலதை—ஏனோ
எச்சில்துப்பி மறுதலிக்கின்றதோ?

கூடியோடி விடுவோமென்றுன்னை
கூப்பிட்டழைக்கவில்லை அம்மா
ஆடியாவணியில் நாள்பாரென்று—உன்
அப்பனிடம் சொல்லத்தான் அழைத்தேனடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலடி மூலையிலே குடியிருக்கும்
கோவிந்தன் கோணல்கண்ணால் பார்த்துவிட்டு
வாடிப்போயிருந்த மாமனிடம்–பெரிதாய்
வத்தி வைத்துவிட்டுப் போனாமே.

அற்பர்கள் பேசும்பேச்சுக்களை எல்லாம்
அனைவருமே நம்புகின்ற வீட்டில்
கற்புக்குக்களங்கம் வரக்கூடாதென்றே–நான்
காணாமல்போனேன் என்கண்மணியே.

விழிகளிரெண்டிலும் உறக்கமில்லை
விருப்புக்கும்வெறுப்புக்கும் வித்தியாசமில்லை
மொழிதனுக்கே கிறக்கம்வருமே–உன்
மோகவண்ணப் புன்சிரிப்பினாலே.

ஊரும்சமூகமும் நம்கலாச்சாரமும்
உலகில்பரந்து வாழும் தமிழினமும்
உனையொத்த பெண்களைத்தானே–இரு
கண்களாய் காவலாய் மதிக்கிறது.

ஆண்களுடன் பெண்கள் பேசினாலே
அவமானம்வருகிறது என்றார்களானால்
கண்ணானகண்மணியே உனக்கு–என்னால்
கவலைகள் வந்துசூழ நான் அனுமதியேன்.

பேச்சுக்கொடுமையைத் தாங்கிக்கொள்ளாது
பெயர்ந்திங்கு நானும் வந்தேனம்மா
மூச்சு அறுந்துபோகும்வரைக்கும்–உன்
மூச்சுக்காற்றில் கொஞ்சம்வாழ்ந்திருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்அப்பன்பார்த்து பேசிமுடிக்கும்
உயர்வான மாப்பிள்ளைக்கு மாலையிடு
என்னினைப்பைத் தொலைத்துவிட்டு—நீ
என்றும் எழிலாக வாழ்ந்துகாட்டு.

## இலையுதிர்காலம்.

நிழல் மரங்களே—
இது என்னகோலம்..?
யார் உங்களைத்
துகிலுரிந்துவிட்டுப்
துணிவோடு போனார்கள்..?
மெளனமாய் இருந்தால்
என்கேள்வி என்னாவது..?
ஓ—
கார்த்திகை மழையில்
களித்து நீராடிடத்தான்
ஆடைகள் களைந்தீரோ..?
அதற்கும் பதிலில்லையா..
தேசம் எங்கிலும்
தீபாவளி கொண்டாடும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் மட்டுமேன்—
நிர்வாணமாய் நிற்கிறீர்..?
என்ன முணுமுணுக்கிறீர்—
காலதேவனின் கட்டளையா..?
அப்படி என்றால்—
அவர் சித்திரைக்குத்தான்
சேலைவாங்கித் தருவாரோ..?
என்ன அவலமிது—
அதுவரை உங்களுக்கு
நீண்ட நிர்வாணம்தானா..?

## சுகம்சுகம்

அன்னையின் மடியே பிள்ளைக்குச்சுகம்
அவளுக்கோ பிள்ளையின் மகிழ்வேசுகம்
தன்னைத் தந்ததில் மனைவிக்குச்சுகம்
தாரத்தின் சிரிப்பே கணவனுக்குச்சுகம்

பழந்தமிழ் இலக்கியம் படிப்பதில்சுகம்
பழகியநண்பர்களின் பாசத்திலும்சுகம்
இளந்தளிர்தன்னை நெருடுதல்சுகம்
இளவேனிற்காலையில் எழுதலும்சுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணைநிலவில் நடப்பது ஒருசுகம்
புற்தரைதன்னில் சாய்வது ஒருசுகம்
பாமரர்பாடிடும் பாடல்களில் நல்ல
காவடிச்சிந்து காதுகளுக்குச் சுகம்

காதலிகடிதத்திற்காய் காத்திருத்தல்சுகம்
கண்டதும் அதனைப்படிப்பது ஒருசுகம்
மாலையில்சேர்ந்தே உலாவுதல் ஒருசுகம்
மயங்கித்தயங்கித் தழுவுதல் ஒருசுகம்

பச்சைவயல்களைப் பார்ப்பதுஒருசுகம்
பறவைகள் அங்கேபாடுதல் ஒருசுகம்
கொச்சைமொழியில் பேசிடும்குழந்தையை
கொஞ்சி எடுத்து அணைப்பதுஒருசுகம்

காலையில்கதிரவன் வருகையில்ஒருசுகம்
கவிதையில் அதனைவடிப்பது ஒருசுகம்
ஆலையில் அனுதினம் உழைப்பதில்சுகம்
அன்றைய உழைப்பைப் பெறுவதுஒருசுகம்

மழையின்தூறலில் நனைவது ஒருசுகம்
மழைநின்றபோதினில் நடப்பதுஒருசுகம்
பிழைசெய்தோரை மன்னிப்பது ஒருசுகம்
பிழையேதும் செய்யாதிருப்பதும் சுகம்

இருளகலும் காலையை ரசிப்பதில்சுகம்
இரவில் மழைநாளில் துயில்வதும்சுகம்
அருள்வேண்டி தியானத்தில் அமர்வதுசுகம்
ஆண்டவன்சந்நிதி அமைதியில் ஒருசுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைமணலில் நடப்பது ஒருசுகம்
கடலைவாங்கிக் கொறிப்பது ஒருசுகம்
கடலில்கூட்டமாய் குளிப்பது ஒருசுகம்
கரையேறி வெயில்காய்வதும் ஒருசுகம்

விடலைநாட்களை நினைப்பது சுகம்
விடுபட்டநண்பனை காண்பது சுகம்
மடலுடன் மலரைப் பிடுங்கியெடுத்து
மணத்தை நுகருதல் இன்னொருசுகம்

கருவைக்கவியாய் வடிப்பது ஒருசுகம்
கவிதைகள் அச்சேறிக்காண்பதும்சுகம்
கருக்கொண்டமேகத்தைக் காண்பதுசுகம்
காலமழை மண்ணில் வீழுதல்ஒருசுகம்

பள்ளிநாள் நினைவுகள் பலருக்குச்சுகம்
பருவத்துக்கனவுகள் கன்னியர்க்குசுகம்
துள்ளும்வயதினில் காதல்கொள்ளுதலும்
தூதாய் செல்லுதலும் சிலருக்குச்சுகம்.

திண்ணைப்பேச்சில் சிலபெரிசுக்குச்சுகம்
திருப்தியாய் குடிப்பதில் பலருக்குச்சுகம்
எண்ணற்ற சுகங்கள் எத்தனையோ உண்டு
எழுதிக்கொண்டிருப்பதிலே எனக்குச்சுகம்.

கன்னம்குழியச் சிரிக்கும் குழந்தையை
காணும்காட்சியில் எத்தனைசுகமையா
இன்னும்எழுதிட இனிப்பானஆசையுண்டு
ஈழமண்வாசனையே எல்லோருக்கும்சுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு விரல்...

இரண்டாம் போருக்குப்பின்
இயற்கையோ—தன்
அழகினை இழந்தது..
ஆற்றலையும் மாற்றியது
தன்மேல் மென்மேலும்
அழுக்குப் படிந்ததனால்
ஆத்திரமடைந்ததோ..?
விண்கலங்களின் துகள்கள்
விண்வெளி வீதிகளில்..
செயற்கைக் கோள்களின்
சிதைவுகள் வேறு..
பூமித்தாயின் மேனியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்புது ரசாயனக்கலவை..
அலைபுரளும் கடற்கரைகளில்
எண்ணெய்க் கழிவுகள்..
அழகிய சமுத்திரங்களில்
ஆங்காங்கே அணுச்சோதனை..
வான மண்டலத்தில்
வாகனங்களில் புகைஜாலம்..
தொழிற்சாலைத் தொடர்களில்
தொல்லைதரும் ஓயாதஓசை..
இப்படியே போனால்
இயற்கை எங்குதாங்கும்..?
உயிரினங்கள் எங்ஙனம்
உயிர்ப்புடன் வாழும்..?
காதலின் சாட்சியாம்—
சலவைக்கல் தாஜ்மகாலே
சலவைசெய்யப்படும் நிலை..
நீ இன்னும்
வாழவேண்டியவனல்லவா..?
தினம்தினம்—நீயும்
நெருப்பு விரல்களுக்கு
முத்தமிட்டுக்கொண்டிருக்கிறாயே..
வாயு மண்டலமே
கெட்டுக் கிடக்கிறது..
உன் வாயும்கூடவா—
இப்படிப் போகவேண்டும்..?
சுவாசத்தை யோசி..
இயற்கையை நேசி..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுரபி.

மங்கையிவள் கண்ணின் வண்ணம்—நீல
மலரில் விழுந்ததோ..?
கங்கை இவளின் கூந்தல் கண்டே
தரையில் தவழ்ந்ததோ..?

விந்தையான விரல்கள் கண்டு—மகர
வீணை சிலிர்த்ததோ..?
வெளியில் வந்ததென்றல் கூட
வியப்பில் குளிர்ந்ததோ..?

பொன்னில் வார்த்த சிலைகள்—இவள்
போல இருந்ததோ..?
பொழுதுசாயும் நேரம்வானில்
பூவை வண்ணமோ..?

கெண்டை போன்ற கால்கள்—தங்க
தண்டை அணிந்ததோ..?
வண்டு வந்துமொய்க்க கூந்தல்
வதங்கி விழுந்ததோ..?

இவளைக் காணும் பெண்களுக்கு
ஆசை பிறந்ததோ..?
இளையவனிவனின் நாவில்—புது
கவிதை சுரந்ததோ..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலனா? காலமா?

இன்னும்-
மறக்க முடியவில்லை..
நாம் பிரிந்த
அந்த பொழுதுகளை..
பல மணித்துளிகளை
இருகண்ணீரின் துளிகளினால்
கரைத்தாயே-அந்தநாளை
மறக்கத்தான் முடியுமா..?
நாம் முதன்முதலாய்
சந்தித்த பொழுதுகள்-
பசுமை படர்ந்தவை..
சேர்ந்து உலவியபொழுதுகள்-
இனிமை கலந்தவை..
நம்மை பிரிவுவந்து-
பிழந்த நாட்களிருக்கிறதே
அவை கொடுமையானவை..
சேர்ந்த உள்ளங்கள்
பிரியவேண்டும் என்பது
நியதியா-இல்லை
நிர்ப்பந்தமா..
எதில் நாமடங்குவோம்..?
உன்னையும் என்னையும்
வெவ்வேறு துருவங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் பார்ப்பதில்
இறைவனுக்கு என்னஇலாபம்..
இது காலத்தின் கட்டாயமா..?
காலம் நம்மை இணைக்கும்
காத்திருப்போம்—இல்லை
காலதேவனின் கட்டளையா..?
காலன்நம்மை இணைப்பான்
கவலையைவிடுவோம்—கண்மணி...

## குருதி ஜாதி.

சேற்றில் செந்தாமரை—
வாஸ் தவம்தான்..
இங்கே
பொஸ் னியாவில்—
இடிபாடுகளுக்குள்ளும்
செந்தாமரைகள்..
நீரில்லை ஊணில்லை
நிலையான இடமில்லை..
நித்தம் நித்தம்—
இடம்பெயர்வுகள்
சுத்தமான துணியில்லை..
சூடுதேடித் தேகம்
சுருண்டு விழாதகுறை..
அதற்குள் வாடிவதங்கி
நீ மட்டும்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தனித்துப்போனாய்..?
உன் தாய்தந்தையர்
மரித்துப் போயினரா..?
உற்றார் உறவினர்
உனைவிட்டுப் பிரிந்தனரா..?
உன் கடைக்கண்ணில்
அடைகாத்த கவலைகளை
கண்ணீருடன் கரைத்துவிடு..!
என்ன பார்க்கிறாய்..?
நானும் நாதியில்லா ஜாதிதான்
இங்கு பாய்வதுபோல்
இரத்த ஆற்றில்–நீந்திக்
கரையேறி வந்தவன்..
மரிப்பின் விழிம்பிலிருந்து
மருத்துவத்துக்கு வந்தவன்..
இறைவன் நம்இணைப்பை
இங்கே வைத்திருக்கிறான்..
இது ஒருவகையில்
பிராப்தம்தானோ..?
ஆனால்–
ஈழத்து மண்ணைப்பற்றி
நீ அறிந்திருக்க
வயதுமில்லை–வழியுமில்லை..
பின்னாளில் நீயும்–
ஈழவனே..
அப்போது–தமிழனின்
சரித்திரம் படிப்பாய்
தமிழையும் படிப்பாய்..
தமிழிலும் கதைப்பாய்
ஏனென்றால்–
உன்குருதியுடன் கலந்திருப்பது
என்குருதி என்பது
உனக்குத் தெரியாதல்லவா..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை..

என்னிடம் சொல்லுங்கள்—
இது அவசியம்தானா..?
இலங்கை இரண்டாவதற்குள்
எங்களுக்குள் பிரிவுவந்து
பிய்த்துக் கொள்வதா..?
பொதுநலம் என்பது—
பொய்யாகிப் போனதா..?
போனவர்கள் மீண்டும்
ஈழத்துக்கு மீழ்வதா..?
கோழை என்றபேய்—
உங்களில் குடியேறிவிட்டதா..?
வெட்கமே உங்களிடம்
வெட்கித்துப் போனதா..?
இது உங்களுக்கே—
நியாயமாய் தோன்றியதா..?
வெளிநாடென்று—யாவரும்
வெளியேறிப் போய்விட்டால்
வெற்றுப்பூமியில்—யார்
விடுதலை பெற்றுத்தருவது..?
ஆணழகன் என்றுங்களை
அப்போது சொன்னதுண்மை..
துக்கத்தைத் துரத்தியதும்
தூக்கத்தைத் தொலைத்ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தேகத்தில்கொண்ட
காதலினால் அல்ல..
எங்கள் தேசத்தின்மேலுள்ள
காமத்தினால் என்பதை–
என் கண்களில்
கண்டுகொள்ளுங்கள் காதலரே..!
துப்பாக்கி ஏந்துகின்ற–
பாக்கியம் கிடைக்கவில்லை
துர்ப்பாக்கியசாலி நீங்கள்..
கையில் வாள்தந்து
வாழ்த்துக் கூறி–
களமனுப்பும்நாள் வருமென்று
கண்ட கனவுகளெல்லாம்–
களவு போய்விட்டன..
உயிருக்கு ஆசைப்பட்டு
ஓடிப்போகும் உங்களை
ஒருமுறை பார்ப்பதற்காய்
ஓடிவந்தேன்–எதற்காக..?
உங்கள் கண்களில்வைத்திருந்த
என் பாதியுயிரை–
பறித்துக் கொள்ளத்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண்பதெப்போ.?

பார்என்று நிலாக்காட்டிச் சொன்ன—அந்த
பாடல்கள் நினைவிருக்கின்றதம்மா
யார்கவி இவன் என்றுசொல்லும்—இந்த
பேரெல்லாம் ஊனுக்கேதான் அம்மா.

தலைசீவி சரிபார்த்து நீயும்—என்னை
தலைவாசல்வரை விட்டுச் செல்வாய்
விலைபேசும் தலையாகிப் போனேன்—உன்
விருப்பத்தை நிராகரித்திங்கு வந்தேன்.

பல்கலை படிப்பித்து பதவிதந்து—எனை
பலபேரும் போற்றும்வகை செய்திட்டாய்
சிலகதைகள் என்நெஞ்சைவாட்டும்—உனை
சிறுபிள்ளையாக்கிக் காண்பேன் நானே.

கடல்தாண்டும் கட்டாயம் வந்தது—நீ
கடுகளவும் சம்மதம் தரவில்லைதான்
மடல்கண்டு மனம்மகிழும்கிள்ளை—நின்
மதிமுகம் காண்பதெப்போதிப் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுக்காக..

நீ எனக்கு–
பிறந்தநாள் வாழ்த்துக்களை
அனுப்பும்போது
வாழ்த்துக்களை மட்டும்
வரைந்து அனுப்பு..!
முகம் பார்க்கும்–
என்வீட்டுக் கண்ணாடியையே
நான் பொய்சொல்லக்
கற்றுக் கொடுத்திருக்கிறேன்..
நீயும் அதனுடன்
ஒத்துப்போக மாட்டாயா..?
வாழ்த்துக்களை மட்டுமே எழுது
வயதுகளை அதில் வரையாதே..!
இளமையுடன் வாழவேண்டித்தானே
இறைவனுக்குத் தினம்தினம்
விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன்..
மனிதவாழ்க்கை வட்டத்தை
மறுதிசை நோக்கி–
மாற்றிச் சுழலவிடவும்
அதில் குறிப்பிட்டிருக்கிறேன்..
என்வயது ஐம்பதில்தொடங்கி
இருபதில் நின்றுநிலைக்கவேண்டும்–
என்பதே என்னாசை..
அப்போதுதானே–உன்னை
காலமெல்லாம் காதலிக்கமுடியும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை சிறிது.

அகதிமுகாம்...
வைத்தியப் பரிசோதனைக்காய்
வரிசையில் கால்வலிக்க
எத்தனைநேரம் காத்திருப்பது..?
வைத்தியர்களின் வருகைக்காய்
வழியிலே அனைவர் –
விழிகளும் மொய்த்திருந்தன..
என்விழிகளின் விரிப்பில்
பழக்கப்பட்ட விம்பமொன்று..
வெற்று நெற்றி –
வெள்ளை ஆடையும்
வெறும் கழுத்துமாய்..
ஓ.. அது வசந்தியா..?
என் நெஞ்சின்வசம்
தீயைக் கொட்டிவிட்டு
எங்கேயோ போய்மறைந்த
நீயா – இங்கு..?
உன் கணவனையும்
கடவுள் களவாடிவிட்டானா..?
அப்போது –
உன்னைப் பார்த்ததும்
என்னிமைகள் கூட
இமைக்க மறந்துவிடும்..
இப்போதோ –
என் விழிகளிரெண்டும்
விரும்பியே மூடிக்கொள்கின்றன..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலவெள்ளம் வேகமாய்
நுரைத்து ஓடியதனால்—
நரைத்துப் போனது
என் முடிமட்டுமல்ல
உன் நினைவுகளும்தான்..
நீ என்னைக்கேட்கலாம்—
ஏன் பேசவில்லை என்று..
என்ன இருக்கிறது—
இருவரும் பேசிக்கொள்வதற்கு..
எல்லாவற்றையும் தானே
தீயிலிட்டு தீர்த்துவிட்டாய்..
அன்று—உனக்கு
என் இதயத்தில்பாதியை
தந்துவிட்டதனால்தான்
இன்று—பாவியிவன்
இந்த வரிசையில் நிற்கிறான்..
மீதியை—நான்
மீண்டும் இழக்கவிரும்பவில்லை..
இன்னும் கொஞ்சநாள்
வாழ்ந்துபார்க்க ஆசைப்படுகிறேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே மயங்காதே..!

மனமே—நீ
சிறிதாகிப் போகாயோ..?
மல்லாடுகின்றேன்—
உன்னால் தினமே...
நாள் நாளாய்
நலிவடைகின்றேன்—உன்னால்
நீமட்டும் வளர்கின்றாய்
நிதமும்—தன்னால்...
மனமே..!
என் இரங்கல்பா
கேட்கலையா—உனக்கு...
மதிகெட வைக்கிறாயே
என் அழுகைக்கும்—
அழுக்கிற்கும் யார்பொறுப்பு..?
நீதானே—ஆட்டியெனை
நித்தம் வாட்டுகிறாய்...
உன்னைக் கட்டிப்போட
ஒருவழியும் தெரியலையே...
ஆசையில் ஏங்குவதும்
அதற்காக ஓடுவதும்—
பாதையில் திசைமாறி
பள்ளத்தில் வீழ்வதுவும்
பாவி உன்னால்தானே...
தூங்காமல் விழித்த
துயர் இரவுகளெத்தனை..?
ஏங்கியேங்கி இளைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்பாகிப் போனேன்...
நீ மட்டும்—
காட்டு எருதாய்விளைந்து
கடுமையாய் தாக்குவதேன்..?
நாட்டம் வைப்பதில்
நன்மைபெறச் செய்யாயோ..?
கூட்டம் குஞ்சரியென்று
குலவித்திரிவதை நிறுத்து..!
ஏற்றம்வர எனக்கு—
எதிரில்நின்று வழிகாட்டு..!
எதிலும் மயங்காதபடி
எனைமாற்றி அனுப்பு...

# இது நடக்கும்.

நெஞ்சைநிமிர்த்தி வெளியேவா..
நீயெல்லாம் தமிழ்தான்பேசுகிறாயா..?
வஞ்சகவர்த்தை சொல்லி
வாக்குகளை அள்ளிக்கொண்டு
கொஞ்சிக் குலாவுவதற்காகவா—நீங்கள்
கொழும்புக்குப் போனீர்கள்..?
கெஞ்சி உரிமைபெறத்தானா
கேடுகெட்ட உங்களை
நாடாளுமன்றம் அனுப்பிவைத்தோம்..?
இல்லையே—நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சு மெத்தைகளையும்
பவுசான ஆசனங்களையும்
கண்டவுடன்—கலங்கி மயங்கி
கஞ்சுக்கு அலைந்துதிரிந்த
கதைகளையும் மறந்துபோனீர்கள்..
மிஞ்சிமிஞ்சிப் போனால்
மிகையான இரண்டுவார்த்தை..
கைகட்டி கைதட்டிக்
காலம் கடத்துகிறீர்கள்..
அஞ்சிக்கெஞ்சி—அம்மையாரிடம்
அழுவதற்குத்தானா உங்களை
அங்கு அனுப்பிவைத்தோம்..?
பஞ்சமும்பட்டினியும் நோயும்
படையினரின் கெடுபிடிகளும்
பாலியல் பலாத்காரங்களும்தாளாது
பிஞ்சுக்குழந்தைகளுடன்—தாய்கள்
பிறந்தமண்ணில் வாடுவதை
நெஞ்சுநிமிர்த்திச் சொல்லவேண்டாம்.!
நிலைமையினை விளக்குவதைவிடுத்து
அம்மையாருடன் பேசுவோம்—
இல்லை—அரைநாளுண்ணாவிரதம்..
மிஞ்சிப்போனால் வெளிநடப்பு—
பின் மிதவாதிகளுடன் கைகுலுக்கு..
என்னட்டா கதை விடுகிறீர்—
காக்காய் கலைக்கறீர்..?
எங்களை ஏய்க்க—
இனியும் முடியாது தம்பி..!
ஒன்றை எண்ணிக்கொள்—
கால்பிடித்து வால்பிடித்த
கயவர்கள் போனபின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலியிடத்தை நிரப்புவதற்காகவா
கற்போடு உங்களை அனுப்பினோம்..?
வேலியற்றிருந்த குடிசை—
மதில் வீடாகமாறியது...
காலியாய் திரிந்த தம்பிகளுக்கு
'கவர்மெண்டு' உத்தியோகம்...
தாலியேறாதிருந்த சகோதரிகளுக்கு
தரமுயர்பதவிகள் மாப்பிள்ளைகள்...
முன்னேற்றம் கண்டுமகிழ்ந்தோம்
அது உன்வீட்டோடு நின்றதால்
கொதிக்கிறோம்—குமுறுகிறோம்...
தேர்தலுக்குமுன் தேய்ந்தபாதங்கள்—
தேவனின் பாதமானதெப்போது..?
ஒழுங்காகக் கடமையைப்பார்..!
உன்தோழருக்கும் சொல்லிப்பார்...
இராஜினாமா— இருக்கவே இருக்கிறது
இங்குவந்து எங்களுடன்சேர்ந்து
இரண்டறக் கலந்துவிடு..!
ஏழெட்டாண்டுக்கு முன்பிருந்த
எட்டப்பரை எண்ணிப்பார்..!
இங்கே—
ஊரின் சாலைகள்தோறும்
மிகையான மின்கம்பங்கள்—
மின்சாரமில்லாமல் தூங்குகின்றன...
அவை—மீண்டும்
புதுக்கடமைபார்க்கும்நிலை
உங்களால்தான் உருவாகும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிமழை.

என் விழிகளிரெண்டும்
வியப்பால் விரிகின்றன...
என்ன விந்தையிது
வானத்துக்கும் பூமிக்கும்
வர்ணம் மாற்றிவைக்க
கட்டளையிட்டது யாரோ..?
நீலவானம்தான்—இரவில்
நிறம் மாறிப்போனதோ..?
சூரியன் இன்று—குளிரில்
சுருண்டு தூங்கிவிட்டானோ..?
பச்சைப் புல்வெளிகளெல்லாம்
வெள்ளைவிரித்தது—எதற்காக..?
மரங்கள் மனைகளெல்லாம்
இரவோடு இரவாக
விதவைகளாகி—
வெள்ளையாடை பூண்டு
விடிந்தும் விடியாததுமாய்
கண்ணீர் வடிக்கின்றனவா..?
என்ன நிகழ்ந்தது—இங்கு...
வர்ணங்கள் சூடிய
வாகனங்களும் கூட—
வெள்ளையால் போர்த்தி
உறங்கிக் கிடக்கின்றனவா..?
அரசியல் தலைவர்யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்போ என்று—மேலே
போய்ச்சேர்ந்து விட்டாரோ..?
இப்படி இது இருக்க—
சின்னஞ் சிறார்களுக்கெல்லாம்
அப்படியென்ன குதூகலம்..?
சக்கரப் பாதங்கள்கொண்டா—
சாலைகள் தோறும்
சறுக்கி விளையாடுகிறார்..?
அட என்ன அதிசயம்
வெள்ளை மழையும்—
வெளியில் பொழிகின்றதே...
வெடுக்கென்று கைநீட்டினால்
சில்லிட்டு சிதறுகிறதே...
என்னுடைய தேசத்தில்
இப்படி ஆனதில்லையே...
இது புதுமைதான்—எனக்கு
புதுத்தேசத்தில் கால்வைத்தவேளை
குளிர்பதனப் பெட்டிகளை
எங்கிருந்தோ கொண்டுவந்து
எல்லா இடங்களிலும்
இப்படியா கொட்டிவிடுவது...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள் யாக்கிரதை.!

புழுதியில் குளிக்கும் புதுமனிதா
புதையலைக்கண்டு மயங்காதே—நலமாய்
பொழுதுகள் உனக்கும் புலர்வதற்கும்
போலிகளைத்தேடி பொசுக்கு..!

விடியும்விடியும் என்றிருந்து
விழித்தபடியே தூங்கிப்போனாய்—வரும்
முடிபுகள் உனக்கும் சுபமாகும்
முழுமனதாய் முயற்சிசெய்..!

நம்பிக்கைவைத்தோர் நாசம்செய்ய
நாளெல்லாம்நீ ஊமையானாய்—திடமாய்
எம்பிக்கைதூக்கி உறுதிபூண்டால்
எதிலுமே முழுவெற்றி எழும்..!

பாசம்பந்தங்கள் என்று பேசுகின்ற
பாசாங்குகளால் நீதுவண்டிடாதே—வெறும்
வேசத்து நஞ்சுள்ளநெஞ்சினரை
வெளியுலக்கிற்கு விரட்டிவிடு..!

விழுதுகளான நல்லுறவுகள் உன்னை
வீழ்ந்துவிடாமல் காக்குமென்றாய்—அங்கே
பழுதுகள்சிறிதேனும் வந்துவிட்டால்
பட்டுப்போய்விடுவாய் பார்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மதமா.?

கடிதங்களை எழுதாதே கண்மணியே—நாம்
காதலராகி விடவல்லை இன்னுமடி—உன்
பிடிவாதத்தைக் கொஞ்சம்விட்டுவிடு—இது
பிழையில்லை பிரியத்தைச் சொல்லிவிடு..!

தூதுசொல்லிஅனுப்பாதே தூயவளே—தொலை
தூரத்தில் இல்லையடி நானும்தான்—கொடும்
சூதுவிளையாட்டுஇதுவல்ல நடுங்காமல்—உனது
தூய அன்பை என்னிடத்தே கூறிவிடு..!

பாட்டுப்பாடி அழைக்காதே கண்ணே—உன்
பாட்டைப்புரியும் திறனில்லைஎனக்கு—நெஞ்ச
கூட்டுக்குள்இருக்கும் அன்பைக்காட்ட—மெல்ல
கூப்பிட்டால் போதும் நானங்குவருவேனடி...

ஜாடைகளைப் புரிந்துகொள்ளும்திறனில்லை—என்
ஜாதிமல்லிகையே புரியும்படி சொல்வாயா—வர்ண
ஆடைகள் அணிந்துவரும் தேவதையே—இந்த
ஆடவனின்காதில் உன்காதலைச்சொல்லிவிடு..!

கவிதைளில்வரைந்து எனைக்கலக்காதே—தமிழ்
கற்றதெல்லாம் நான் கொஞ்சம்தான்—நமது
சரிதையில் கவிதைகளைச் சேர்க்காதே—புதுச்
சங்கமத்தை கொஞ்சம்தான் செல்லிவிடு..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை..

மேகமே—
என்மேல் கோபமேன்..?
நீ விதைத்துவிட்ட
காதல் விதை
முளைப்பதற்கு முன்னால்
ஏனிந்தக் கபடநாடகம்..?
நீரை வார்க்காமல்
நீ விரைந்து
போய் மறைந்திருந்தால்
நியாயம் இருக்கலாம்..
இடியை மட்டும்
என்மேலே—
இறக்கிவிட்டுப் போனதில்
என்னஇலாபம் உனக்கு..
விதை புதிது
நிலமோ பழுது—
என்று தெரிந்திருந்தும்
விதைத்தது யார்குற்றம்..?
நிலத்தினைச் சரிவர—
செப்பனிடவேண்டியது
யார் பொறுப்பு..?
வேதனையை ஊற்றும்படி
யாரும் கேட்கவில்லை..
தாகம்தீர்க்கும் நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரைச் சொரியாமல்
தீயை வார்த்துவிட்டு
திருட்டுத்தனமாக–
போய் மறைந்துவிட்டாயே..
இது எந்தவகையில்
பொருந்தும்..?
எப்படி நியாயமாகும்..
காற்றடிக்கும் திசையில்
கவனித்துச் செல்லுமுனக்கு
காதற்பயிரின் உன்னதம்–
எங்கே தெரியப்போகிறது...?

# தப்புக்கணக்கு.

புதிய தேசமிது..
அரசே–குடிகளை
கொன்று குவிக்கும்
புதுமைத் தேசமிது..
ஐந்தரை இலட்சம்தமிழரை
ஐந்தே நாட்களில்
அகதியாக்கிய பெருமை
அரசு உனக்கு மட்டுமே..
'ரத்வத்தே' குடும்பத்திற்கும்
'நாயக்கே' வம்சத்திற்கும்
தமிழர் இரத்தப்பலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி தீர்க்கவேண்டும்..?
வவுனியாவில்—
உணவுகளைப் பறித்தெடுத்து
தமிழனைப் பட்டினியிட்டால்
அவன் பணிந்திடுவானா—இல்லை
உனக்கு மண்டியிடுவானா..?
புலிகள் மெலிந்திட்டால்
பூனைகளாய் ஆகிவிடுமா..?
சிங்கத்தை சிறையிலிட்டால்
அசிங்கமாய் ஆகிடுமா..?
தப்புக்கணக்கிது..
புத்தரின் பிள்ளைகளுக்கு
போதிமரம் போதாது..
புலிப்பாலைப் புகட்டி—
போதனைகள் செய்யவேண்டும்..
உனக்குத் தெரியாதா..
பூட்டிய கதவுகளுக்குள்ளும்
பெடியன்கள்புகுந்து வரக்கூடியவர்கள்..
கொழும்பில் கூட
குண்டுகள் விதைத்துள்ளார்..
நீ சாப்பாடுபோடுகின்ற—
நாய்களுக்குக் கொஞ்சம்
சாராயம் ஊற்றிவை..!
ஏனென்றால், அவை
சந்திகளில் தூங்கிவிடுகின்றன..
பாவம்நீ துர்ப்பாக்கியசாலி..
இலங்கை அரியாசனம்—
துப்பாக்கிப் பரிசில்களை
வாங்கியே பழக்கப்பட்டுவிட்டது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவகாலம்:

உன்னை நான்
அப்படியேதான் பார்க்கிறேன்..
ஏன் இப்படி—
ஒளிந்து மறைந்து
பார்வையால் என்விழிகளில்
பச்சை குத்துகிறாய்..?
வித்தியாசாலை விடுப்பில்
நான்—
வெளியூர் சென்றபோது
என்ன வித்தியாசம்
நிகழ்ந்தது உனக்கு..?
என்னால் எதையும்
புரிந்துகொள்ளமுடியவில்லை..
விடுமுறை நாட்களில்—
உன்னுடன் பேசுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ விசயங்களை
உள்ளத்தில் சேமித்தேன்..
இன்று—உன்
திருட்டுப் பார்வையால்
எல்லாமே—
தொலைத்து விட்டேன்..
என்னமாயம் நிகழ்ந்தது..?
கலகலத்த உன்சிரிப்பு
கள்ளச் சிரிப்பானதேன்..?
நம் நேசக்கதையில்—
யாரும் புகுந்து
நெருப்பினை வைத்து
பற்ற வைத்தார்களா..?
என் கனவுகளுக்கு
கல்லறை கட்டப்பட்டதா..?
என் மகிழ்ச்சிகள்
மரித்துப் போய்விடுமா..?
எத்தனை கேள்விக்கணைகள்
என்னைத் துளைத்தன..
உன்னிடம் கேட்காமலே
என்மனம் கெட்டது..
மூன்றுநாட்களின் பின்னர்தான்
அந்த முடிச்சவிழ்ந்தது..
என் வீட்டில்—
பெரியவர்கள் சிலர்
பேசிக்கொண்டிருந்தார்கள்
'நம்ம புனிதாவும்—
பூப்பெய்திவிட்டாள்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபித்து ஜெயிப்போம்..

தாயின் மலர்ப்பாதம்
வணங்குதல் போல்—
தாயக மண்ணினை
வணங்கிடுவோம்..
நோயில் பிணியில்
நொடிந்தவர் தமக்காய்
நொடிப் பொழுதேனும்
பிரார்த்தனை செய்வோம்..
முடிந்தவரைக்கும்—
நோன்பிருப்போம்..
முடியாதவர்க்கும்
உதவிகள் செய்வோம்..
தேசங்களின் எல்லை—
திரை விலகவேண்டி
தீர்க்கமாய் முடிவொன்று
எடுத்துரைப்போம்..
திக்கெட்டும் தீவிரமாய்
பறைசாற்றிடுவோம்..
மனிதாபிமானிகளின் பாதங்களில்
மண்டியிட்டுத் தொழுவோம்..
மதம் ஒன்றுதானென்று
மக்களுக்கு ஓதுவோம்..
வறுமைகள் விலகிடவும்
வளங்கள் சேர்ந்திடவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்புகள் தேடி—
முயற்சி செய்வோம்..
உலகம் முழுவதும்
உத்தமர்கள் தோன்றிட
உளமார யாவரும்—
உருகிப் பிரார்த்திப்போம்..
குருதி சிந்திடாத—சித்தாந்த
குவலயம் ஒன்றினை
கூடியவிரைவில் பிரசவிப்போம்..
கூச்சலிடுகின்ற தீவிரக்கும்பலை
கூவி அழைத்துவந்து
அமரச்செய்து—அவர்க்கு
அகிம்சைப்பாடம் புகட்டிடுவோம்..
அனைவருக்கும் நலம்வேண்டி—
அவருடன்சேர்ந்து பிரார்த்திப்போம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமும் நாற்றமும்

சொர்க்கத்திலே—
நிச்சயமானது என்பார்கள்..
எனக்கு—அதன்
வாசனையும் வீசவில்லையே..?
என் வாழ்க்கை
நரகத்தின் நரம்புகளால்
இணைக்கப்பட்டதா..?
என்ன கொடுமை
தினம்தினம் நெஞ்சில்
வேதனையின் வெம்மைவந்து
வாடையாய் வாட்டுகிறதே..
கூடு என்றதானே—
இந்தக் குயில்
உளமார உட்கார்ந்தது
இது கூண்டு என்று
இப்போதுதானே தோன்றுகிறது..
மானிடரின் திருமணம்
நல்மணம் வீசும்போது
என்மனம் நோகும்படி—
இந்த மணம்மட்டும்
ஏனிப்படி ஆனது..?
ஓ, சின்னத்தனமாக
சீதனம் வாங்கியதாலா
என்—மணவாழ்க்கை
சின்னாபின்னமாகி
சீரளிந்து நாறுகிறது..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் பாடு..!

அம்மா..!
குழந்தையாக நானிருந்தபோது
நீ—எனக்கு
தாலாட்டுப் பாடினாய்..
பிள்ளையாய் வளர்ந்தபோது
நிலாப்பாட்டுப் பாடி—
பாற்சோறு ஊட்டினாய்..
பின்னாளில் பாப்பாப்பாட்டும்
பெரியவனான பின்—
குயில்பாட்டும் செல்லித்தந்தாய்..
எத்தனை நாள்—
திருப்பள்ளியெழுச்சியை
உனக்கு மட்டும் பாடினாய்..
இப்போது—
கல்யாணப் பாட்டுப்பாடி
கழுத்தை அறுக்கின்றாயே..
நீ—உன்பாட்டுக்கு
எசப்பாட்டுப் பாடுவதும்
நான் எங்கெங்கிருந்தோ
கடிதங்களின் மூலமாக—
எதிர்ப்பாட்டுப் பாடுவதும்
வாடிக்கையாகிப் போனதே..
உன்—ஒப்பாரிப் பாட்டை
இப்போது கேட்க
என் மனமோ—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புதலளிக்காதே..
அதனால்தான்—
என்காதல் பாட்டை
உன் முன்னிலையில்
பாடமுடியாது கஸ்ரப்படுகிறேன்..
காலம் கனியும்வரை
அதற்காகத்தானே—நான்
காத்திருக்கிறேன் அம்மா..
ஏனென்றால்—
உன் சந்தோசப்பாட்டுகளைமட்டுமே
என் காதுகள்
இதுவரைக்கும்
ஜீரணித்துக்கொள்ள—
தெரிந்து வைத்திருக்கின்றன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு ஜனனம்.

என்னை என்னால்
நம்பமுடியவில்லை..
உன்னைப்பார்த்த பிறகுதான்
நானிப்படியானேனா..?
இந்தச் சின்னப்பூவுக்குள்
பூகம்பம் ஒன்று-
இத்தனை நாட்களும்குடியேறிக்
குமுறிக்கொண்டிருந்ததா..?
அந்த படபடக்கும்
பட்டாம்பூச்சி விழிகளுக்குள்
படைநடாத்தும் திறன்
பள்ளி கொண்டிருந்ததா..?

ஓ..
சிங்களவனின் சிரமறுக்க
சிங்கங்கள்-ஆண்பெண்
பார்த்ததில்லை..
தமிழர் அடிமையின்
தரத்தினையே பார்த்தன..
துவேசத்தளையினைத் தகர்க்கவே
அவை பதுங்கின..
பாலியல் பலிகளுக்கு
பாவப்பட்ட பெண்களா..?
தலைநகரத்து வாவிகளில்
தலையிழந்த தமிழருடலா..?
புத்தரின் இரத்தங்கள்
புனித ஈழத்தினை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபகரித்துக் கொள்வதா..?
அன்னை பூமியை இழந்து
அத்தனை தமிழனும்–
ஆழ்கடலில் குதிப்பதா..?
கேள்வி வேள்விகளினால்
வெற்றியோடு வேங்கைகள்
வேரறுத்துப் பாயும்போது
சின்னப் பூக்களும்–தம்
சிறையுடைத்து வந்தன..
என் சின்னப்பூவே–
உன் புருவவில் அசைவில்
புயலொன்று புறப்பட்டதே..
'பங்க ரின்' வாசலுக்கே
வருவதற்கு பயந்த எனக்கு
என்தங்கத்தைப் பார்த்தே
தைரியம் வந்ததென்பேன்..
வெடிகுண்டின் சத்தத்திற்கே
குலைநடுங்கும் கிழவனிவன்
ஏவுகணைகளை ஏந்தவும்
என் இதயத்தை–
எஃகாக்கிக் கொண்டேன்..
மகளே–
உன்னைக் காணுகிறபோது
நான்– மீண்டும்பிறந்ததாய்
உணர்கின்றேனடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறும் சேறும்

அவன் வந்தநாளில்
வாழ்க்கை இனித்தது..
சேற்றில் இருந்து—
ஆற்றில் விழுந்தமாதிரி
குதூகலம் அவனுக்கு..
சேற்று வாழ்க்கையில்
சோற்றுக்கும் திண்டாட்டம்
சோதனைகள் ஏராளம்..
ஆற்றில் விழுந்ததால்
அத்தனையும் கழுவி—
அடித்துச்சென்ற உணர்வு..
உள்ளூர உவகையுடன்
கள்ளூறும் கதைகளை—
கடிதங்களில் வடித்தான்..
கஸ்ரங்களில்லாது—
காசுபணம் சேர்த்தான்..
களிப்பில் தினம்தினம்
களிநடம் புரிந்தான்..
கேளிக்கைகளைத் தேடியதனால்
கேவலங்களும் தேடிவந்தன..
குடி—வாடிக்கையானதால்
கூட்டமொன்று அவனோடு..
வாழ்க்கைப் படகு
காலவெள்ளத்தில்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டவிழ்த்துக் கொண்டதை
கண்டறிந்து கொள்வதற்கு
நேரமேது நிமிசமேது–
அவனுக்கு..?
அது அடிபட்டுப்போய்
மோதுண்ட பின்புதான்
ஆற்று வாழ்க்கையைவிட
சேற்று வாழ்க்கையின்–
அவசியம் தெரிந்தது..
அன்றைக்கன்று–இதில்
அத்தனையும் இருந்தது..
நிம்மதி ஒன்று மட்டும்
நிமிசத் துளியிலும்–
காணக்கிடைக்கவில்லை..
இத்தனை காலமும்
நரகம் என்னும்
நகரத்திலா குடியிருந்தான்–
அவன்..?
முன்பு வாழ்ந்தது
சாதாரண சேற்றிலல்ல–
சந்தணச்சேறு என்று
கண்டு கொள்வதற்கு
இந்த அஞ்ஞாதவாச–
தவத்தினால் வந்தவரமா
கற்றுக் கொடுக்கவேண்டும்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியபக்கம்...

அடி பெண்ணே..!
வெள்ளைச் சேலை
வேசத்தை விலக்கி—
வெளியே வா..!
கண் அவன் என்றார்கள்
அவன் போனபின்
உன் கண்களை
மூடிக்கொண்டிருப்பது
முட்டாள் தனமல்லவா..?
கண்களை அகலத்திற..!
இங்கே, விரிந்து கிடக்கின்ற
விண்ணைப் போல
உன்னுடைய மனசும்—
நிர்மலமாகட்டும்..!
தலையில் முக்காடிட்டு
இன்னுமின்னும்—
மூலைக்குள் இராதே..!
உன்னை 'மூழி' என்று
மூச்சுவிடாமல்பேசுகின்ற—
இந்த சமூகத்தின் முகத்தில்
காறி உமிழ்ந்துவிடு..!
மண்ணோடு புதைந்தது
உன் பூவும் பொட்டும்தான்—
மனசு இல்லையே..
உன்—ஆணைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படாத ஆசைகளையும்—
கணக்கிலடங்காத கனவுகளையும்
யாரும் புதைக்கவில்லையே..
புன்னகையைத் தொலைத்திட்ட பூவே
சின்னதாய் செய்திசொல்லு..!
உன் உதடுகளில்
புன்னகையைப் பூட்டுகிறேன்—
பூவிலங்கும் சூட்டுகிறேன்..!
மூடநம்பிக்கையுடன்
குடித்தனம் நடாத்துகிறவர்களின்
கூட இருந்து—உன்
கொஞ்ச வாழ்க்கையையும்
கொன்று விடாதே..!
இந்தச் சின்னவயதில்—உன்
சிறையை உடைக்காவிட்டால்
சிதைந்து போவது—
உன் தேகம் மட்டுமல்ல
பொன்னான எதிர்காலமும்தான்..
நம் தேசத்து
எதிர்கால இளைஞர்களின்—
சக்தி உனக்குத் தெரியும்..
அவர்கள் மனதின்
சங்கதிகளை நீயும் அறிவாய்..
அதனாலேதான்—
அறுதியிட்டு உறுதியளிக்கிறேன்..
என் சகோதரியே..!
சின்னதாய் சேதிசொல்லு—
உன் வார்த்தையிலே
புது வாழ்க்கையுள்ளது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டியம்..

மூன்றில் இரண்டுகடல் மீதிநிலமே உலகம்
மூன்றில்ஒன்றில்நீ மீதிதமிழரின்கடலல்லவா—வடக்கில்
தோன்றில் ஒருபிரளயம் தரையெல்லாம் கடலாகி
மீண்டும் யாழ்நகர் மீழும்.

சந்திரிகா அம்மையாரின் தந்திரங்கள் யாமறிவோம்
எந்திரங்களிலா எங்களுக்குப்பூப்பறிக்கிறீர்—வடக்கில்
மந்திரங்கள் மாயங்கள் தமிழனுக்கு செய்திடினும்
சற்றேனும் அடையான் சரண்.

கொடியேற்றிக்குதூகலித்துக் கொக்கரித்தாய்
கொடியவரைக்கொன்றதாக குரல்கொடுத்தாய்—வடக்கில்
குடியேற்றமுயன்று தோற்ற அம்மையார் முடிவை
முடிக்கும் தமிழரின் முடி.

திருமதிகுமாரணதுங்காவின் வெறியாட்டம்நீள்கிறது
வெகுமதிதேடிக்கை கிழக்கிற்கும்நீள்கிறது—வடக்கின்
விசாரணையை இங்குவைக்க நீ திட்டமிட்டால்
தீர்ப்பு தமிழரின் தீ.

அறைகூவல் விடுத்து திட்டங்களைத் திணிக்கிறாய்
அள்ளியவற்றில் எமக்குக்கிள்ளியிடநினைக்கிறாய்—உன்
பிறைநுதலைப்போற்றுகின்ற பேடிகளுக்குப்பிச்சையிடு
பிரித்திடு ஈழத்தை பின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா.

அன்னையே—என்
அன்னைக்கும் அன்னையே..!
உன்—ஒளி வழங்கும்
விழிகளுக்கு உறக்கமேது..?
உன்—பொன் விரல்கள்
வருடிக் கொடுத்ததால்
பொலிவுற்ற முகங்கள்
எத்தனை எத்தனை..?
உன் தீண்டலினாலும்
தூண்டலினாலும்—
தேறியதேகங்கள் எத்தனை..?
திகைத்து, உன்திசை திரும்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசங்கள் எத்தனை..
உன் பஞ்சுப் பாதங்களை
அலங்கரித்துத் தேய்ந்த—
பாதரட்சைகள்
பூர்வ ஜென்மத்தில்
புண்ணியம் செய்தனவோ..?
அவற்றில் ஒன்றாய்
நானாகக்கூடாதா என்று
என்னுள்ளே ஏக்கம்..
கைவீசிக் கைவீசி
கதைபேசி விதைதூவி
நீ கொள்ளைகொண்ட
உள்ளங்கள் கோடிகோடி..
தள்ளாடித் தள்ளாடி
தரையெங்கும் நீபடர்ந்து
பிள்ளைகளாய் பிணியர்களை
பேணிப் பாதுகாத்தவர்
பாரில் யார்தாயே..?
உள்ளத்தில் பிள்ளையாய்
உருவத்தில் கருணையாய்
வெள்ளையாய் சிரிப்பதில்
பவனிவரும் பனிநிலவாய்
கள்ளமில்லா காதல்கொண்ட
கனிவான தேவதையாய்
இம்மண்ணில் வந்தவளே—
உன் திருவுடலுக்குள்
தீயைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைத்துவிட்டது யாரோ..?
எத்தனையோ நாசுகளுக்கு
சுகந்த சுவாசமளித்திட்ட—
உன் சுவாசப்பையைச் சுற்றி
சுவரெழுப்பியது யாரோ..?
பூவுலகே பணிந்துபோற்றும்
பூம்பாதச் சுவடுகளை—
பூட்டுக் கொண்டு
பிணைத்துப் பூட்டியது யாரோ..?
நாங்கள் காணாத ஆண்டாளாய்
கண்முன்னே வந்தவளே..!
எவருமே தீண்டிடாத
பிணிகளை—நீ தோண்டி
எறிந்ததாலோ என்னவோ
நீ காதல் கொண்ட
தேவதூதன் கூட—உன்னை
தீண்டிடாமல் மௌனித்தான்..?
நீ— மார்க்கண்டனின்
மகளென்று நிலையாக
நம்பியுள்ள உன்பிள்ளைகளின்
நம்பிக்கை—என்றுமே
நலிவடையக்கூடாது தாயே...!

(அன்னை நோயின்வாயில் அகப்பட்டிருந்தசெய்தி—
என்னை நோகடித்தபோது எழுதியது...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப்பார்.

பறந்துவந்த நாட்களைமறக்கலாமா—நாம்
பிறந்துவளர்ந்த மண்ணைமட்டும்மறக்கலாமா
உறைந்துவிட்டபனியாட்டம் இறுகிப்போனோம்
உழைப்பினிலே காலத்தைக் கடத்துகின்றோம்
மறைந்தபொழுதுகளை எண்ணிப்பார்ப்போம்
மக்களங்கே படும்துயரை மனதில்கொள்வோம்
கறந்திட்டபாலாட்டம் மனதைமாற்று—நண்பா
கறைபடியாது நம்தமிழ்மானம் காத்துநிற்போம்.

திசைமாறிய பறவைகளாய் இங்குவந்தோம்
தினமும் கவலைமழையில் நாம்நனைந்தோம்
பசைகொஞ்சம் கையியேற மாறிப்போனோம்
பழசுகளைமறந்துவிட 'டிஸ்கோ' போனோம்
வசதிகள் வந்துசேர வடிவாய்க்குடித்தோம்
வட்டிக்கும்பணங்கொடுத்து வாரமுழைத்தோம்
குசியானவாழ்கை இன்னும்தேவை என்று
குட்டிக்கும் புட்டிக்கும் கொட்டியிறைத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தோஇங்குவந்து எல்லோரும்ஒன்றானோம்
இன்பத்திலும்துன்பத்திலும் இணைந்துஒன்றாய்–
பங்குகொண்டோம் பாதிவழி போனபின்னர்
பங்குகேட்டோம்– பறித்தும் கொண்டோம்
மீதியாகவந்தநாளில் மிகப்படித்தமேதாவிகள்
சாதிவேறுபாடென்ற வெறிதனைவிதைத்தோம்
சாதகத்தையேமாற்றிவிட்டோம் நீதிக்குஆளில்லை
நியாயமாக அதனையே ஏற்கச்செய்தோம்.

பாசங்கள் பந்தங்களைப் பிரிந்தேவந்தோம்
பாதிநாட்கள்போனபின் பழசுகளைமறந்தோம்
தேசம்விட்டு தேசம்வந்த திகதியும்மறந்தோம்
தேவையற்ற போதைமருந்தில் மோசம்போனோம்
வேசங்கள்போட்டுவாழப் பழகிக்கொண்டோம்
வேண்டாதவேட்கைகளில் விருப்புக்கொண்டு–
நாசமாக்கிடும் கலைகளைக்கற்றுக்கொண்டோம்
'நாசிகளுடன்' சேர்ந்துவாழப் பழகிக்கொண்டோம்.

இன்னும்சிலகாலம்போக எல்லாம்மறப்போம்
இதுதான்நம்தேசமென்று தனிநாடுகேட்போம்
சொன்ன பொய்வாக்குமூலங்களும்–வாழுகின்ற
சொகுசு'சோசல்'காசு வாழ்க்கைக் குசியுமினி
என்னசெய்யும் என்றுஎவருக்கும் தெரியாது
பொன்னான அந்தப்பொழில் ஈழமண்ணுக்கு
போகின்றஒருநாளில் இக்கண்ணாமூச்சிக்கதைகள்
பெட்டலக்கடதாசியாய்கசங்கி நிச்சயம்கப்பலேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ...றுவாண்டா.

செம்மண்ணின் வாசனையில்
செளித்து சிரம்நிமிர்த்தியவரே..
றுவாண்டா தேசத்தின்
தேசிய செல்வங்களே..!
ஏனையா இப்படி உருக்குலைந்து
உருமாறிப் போனீர்கள்..?
'கொலரா' உங்கள் தேசத்தை
கொள்ளை அடித்ததேனோ..?
அநியாயங்கள் நடக்கின்ற
அண்டை தேசங்களில்—
அது ஆதிக்கம்செய்திருந்தால்
சற்று ஆறுதலென்பேன்..
பதினாறாயிரம்—
இதுவெறும் எண்ணிக்கையா..?
இல்லை—எழுந்து மடிந்த
கடலலைகளின் கணிப்பா..?
இயமதூதனே..!
ஏனடா இப்படிச்செய்தாய்—
என்றொருமனு எழுதிப்போட
என்னுள்ளம் துடிக்கிறது..
மானுடச் செல்வங்களுக்கு—இன்று
மதிப்பற்றுப் போனதாடா..
என்ன கொடுமையிது—
கூடையால் கொட்டுபோல்..
எத்தனை உடலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னாபின்னமாய் சிதைந்தன..
பூவுலகே புருவமுயர்த்தி
வியந்து பார்க்குமளவுக்கு—
மண்ணுக்குள் மறைந்தீர்கள்..
விதிக்கு நீங்களாகவே
விண்ணப்பம் எழுதினீரா..?
இம்மண்ணின்—விடுதலைவேண்டி
விரும்பியே விண்ணேகினீரா..?
வியர்வை முத்துக்களால்
ஈரமானமண்ணுக்கு—நீங்களின்று
விதையாகிப் போனீர்களே..
வியப்பு என்னவென்றால்—
முகாம் முகாமாய்ப்பரந்து
முக்காடுபோட்டு மருந்தளிப்பு..
சாக்காடுமட்டும் குறையவில்லை
முன்பு முகங்காட்டாத—
எத்தனையோ தேசங்கள்
சாப்பாடு மருந்தென்று
சாக்குவைத்து—உம்தேசத்தில்
கால்பதித்து கடமைபார்க்கின்றன..
இப்போது இது எதற்கு..?
கறுப்பன் கறுப்பரென்று
முகம்சுளித்துக் கதைத்தவர்கள்
முகாமிட்டு கொடிகட்டி
'கொலராவுக்கு' மருந்தூட்ட
காரணம் இல்லாமலில்லை..
பறந்துபறந்து உதவுகிறோமென
உலகுக்குக் காட்டத்தான்..
போலிகளாய் நீங்கள்வாழ்ந்ததில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிகளைப் புரிந்துகொள்ளும்
நிலையில் நீங்களில்லை...
உண்மையில் உதவுபவன்
உங்களை அவன்தேசத்துக்கு
அழைத்துவந்து மருந்துதரட்டுமே...
அடிமைகளாகவே பார்த்துப்பழகிய
வெள்ளைநாய்கள்—உங்களுக்கு
அடைக்கலமா தரநினைக்கும்...?
ஊருக்கும் உலகுக்கும்—
உணவு மருந்தென்று காட்டி
அங்கேயும் தங்களுடைய
பாதங்களை நிரந்தரமாய் பதித்து
கொடிநட்டு கோலோச்சத்தான்
பலதேசங்களின் பேரவா...
அபயம் உதவியென்றழுதபோது
ஒருவரும் வரத்தில்லை...
சாகப்போகிறபோது—வாயில்
பால்வார்த்துக் கண்மூடிட
பத்துக்கப்பல்களில் உணவுடன்
படையினரும்— பாசமாய்
மருந்துடன் மருத்துவர் தாதிகள்...
என்ன பாசாங்குகாட்டுறாாகள்..?
அங்கேயே மாற்றிமாற்றி—
மருந்திட்டு மாரடிக்காது
மாற்றிடம் தந்திருந்தால்
விசயமுண்டு விளக்கமுண்டு...
இன்னிலை இனியும்வரலாகாது
நீங்கள் விதையாகிப்போனவர்கள்—
ஒருநாள் விருச்சமாவீர்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது கடிதமல்ல.

நண்பனே—நீ
நோயின் வாயில் இருப்பதை
நான் கண்டுகொண்டேன்...
ஓரப்பார்வையும்—
கள்ளப்புன்னகையும்
காட்டிக் கொடுத்துவிட்டதே...
மிகக் கவனமாயிரு...!
இந்நோய்—
பாயில் படுக்கவைக்காது
பாடுபடுத்தும்...
தூக்கத்தைத் துரத்தும்—
துணிவைத் துலக்கும்...
ஏக்கத்தினால் எல்லாவற்றையும்
எகிறிடச் செய்யும்...
ஓரிரு வார்த்தைகள்
உகுக்கும் வரைக்கும்—
உடலெங்கும் வலிக்கும்...
ஒரு நொடிப்பார்வை
உன்மேல் விழுந்தால்
பாதம் முதல் உச்சிவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒருபாதரசம்
பாய்ந்து பரவும்...
மூன்று நிமிசத்துள்—
நூறுமுறை முகம்பார்ப்பாய்...
கண்ணாடியில் உன்னுடைய
விம்பம் தெரியாது...
நெஞ்சில் விழுந்தவிம்பம்
நேரில்வருவதாய் தோணும்...
பக்கத்தில் யார்நின்றாலும்
பார்த்துக்கொள்ள மாட்டாய்...
பார்வைக்கும் எண்ணத்துக்கும்
பாதை இருக்காது...
எண்ணங்கள் எங்கெங்கோ
எழுந்து சுற்றித்திரியும்...
சந்தித்துக் கொண்டால்
நாளொன்று நாளிகைபோலாகும்...
பிரிந்து வந்தாலோ—
வாரம் வருசமாய்த்தோணும்...
சில வேளைகளில்—
பெற்றவரையும் எதிர்த்து
பெரியவர்போல் கதைப்பாய்...
சுற்றிவர உள்ளவரை
தூசென்றும் மதிக்காய்...
வர்ணங்கள் பார்த்து
வடிவாய் உடையுடுப்பாய்...
வாசலிலே நின்றுகொண்டு
வழியெதுவும் தெரியாததுபோல்
வாய்க்குள்ளே முணுமுணுப்பாய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருணங்கள் பார்த்து
தயங்காமல் பொய்சொல்வாய்...
தடையங்களில்லாது—வீட்டில்
திருடவும் செய்வாய்...
இதற்குமேலும்—அதற்கு
குணங்குறிகள் உண்டு...
ஆனால்,
ஒன்று உனக்குச்சொல்வேன்—
வானவில்லின் வளைவை
நிமிர்த்திட நினைக்கலாம்...
வளைக்கரம் ஒன்றை
வளைத்துப் போடுதல்
அவ்வளவு சுலபமில்லை...
உன்னை வளையவந்தால்
பார்த்து நடந்துகொள்...!
இந்நோயினுக்கு—ஒருமுறை
இவனும் பலியானவன்...
நண்பனே...!
இது கடிதம் அல்ல—
காதலின் ஒருவடிவம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடல்...

நான் உள்ளேதான்
அமர்ந்திருக்கின்றேன்...
உன் கொலுசின் கெஞ்சலும்
செருப்பின் சிணுங்கலும்
எனக்குக் கேட்காமலில்லை...

நான் உள்ளேதான்
அமர்ந்திருக்கின்றேன்...
என்னைப் பார்க்கவேண்டாம்
என்றுரைத்தாயே—
அப்போதென் செவிப்பறை
பாறாங்கல் ஒன்றால்
ஓங்கிஅடித்தது போல
சிதறியதே—சிங்காரி...
பரீட்சைக்கு நான்
படிக்கப் போகிறேன்—என்று
பவித்திரமாய் சொல்லாமல்
எனக்குப் பரீட்சைவைத்தாயா..?
நான் உள்ளேதான்
அமர்ந்திருக்கின்றேன்...

நீ, எழுதிமுடித்த—
பரீட்சைகளில் வெல்லலாம்
அன்றியும் விடலாம்...
நீ, எனக்குவைத்த—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பரீட்சையில்
நான் வெற்றிபெற்றேன்—
இல்லையா சொல்..!
நான் உள்ளேதான்
அமர்ந்திருக்கின்றேன்...

திண்ணையில் நின்று
நீ ஜன்னலூடாக—
பார்த்திருப்பாயானால்
நான் அமர்ந்திருப்பது
உனக்குத் தெரிந்திருக்கும்...
உன் பார்வை—
என்னில் விழும்வரை
என் விழிகள்
உனைத் தீண்டாது..!
உன் கைகளினாலே
திறக்கும் வரைக்கும்
என் கதவுகள் திறக்காது..!
நான் உள்ளேதான்
அமர்ந்திருக்கின்றேன்...

உன் செருப்பின் சிணுங்கலும்
கொலுசின் கெஞ்சலும்
காற்றில் தேய்ந்துபோவதை
என் காதுகள் பருகுகின்றன...
உன் கூந்தல் மலர்வாசம்
காற்றிலே தோய்ந்தென்
நாசிகளில் குடியேறுகின்றன...
நான் உள்ளேதான் இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருநோய்.

பொல்லாத காலம்தான் எனக்கு—ஐயா
போகிறீரே பார்வைதனை விலக்கியே
செல்லியழக் கண்ணில் நீரில்லை
சொந்தபந்தம் எதுவும் பக்கத்திலில்லை.

நானறிந்து பாவமேதும் செய்ததில்லை—பாவி
நாயிலும் கேடாய் ஆகிப்போனேன்
ஊரறியப் பேரெடுத்து வாழ்ந்தவனின்று
ஊரேவேறுக்கும்படி உதிரியானேன்.

தேகத்தில் பாவத்தின் பரிசில்களா—அந்த
தேவன்தான் படியளந்து விட்டானா
மோகத்தில் பிறரைநான் மொய்த்ததில்லை
முகத்திலே தீப்புண்ணாய் தோன்றியதேனோ.

ஊருலகை உலுக்குகின்ற நோயது—என்
உடலுக்குள் எப்படிக் குடிவந்ததோ
பேர்கேட்டு யாவரும் வாய்பிழக்கும்
பெருநோய் எனக்கேன் வந்ததுவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்ஜென்ம வினைதான் வந்ததுவோ—வலிய
முத்தோரின் வாய்ச்சொல் பலித்ததுவோ
என்னபாவம் நானறியேன் பராபரமே
ஏன்பாவி இவனின்னும் உயிருடனே.

கைகட்டி காவல்காத்து நின்றவரும்—என்
கடமைபார்த்து காசுழைத்து சென்றவரும்
கைகாட்டி தூரத்தே ஓடுகின்றார்
காலம்தான் இதற்கெல்லாம் விடைசொல்லும்.

## வாக்குறுதி..

வானமே..!
எனக்கொரு வரம் தா...
வழமுடன் மண்ணை
பாதுகாப்பேனென்று...

பூமியே..!
எனக்கு நீயின்று
புதிதாய் சொல்...
புல்களின் இடையிலேயும்
புதையல்கள் தருவேனேன்று...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியே...!
தினம்தினம் நீ
ஒளிந்து கொள்ளாதே...
இந்த உலகில்
ஒருநாளென்றாலும்
நிலைத்து நில்லு...

வருணனே...!
வரட்சியில் வாடையால்
உயிர்களை வாட்டாதே...
வருசம் முழுவதும்
வசந்தமே வரச்செய்...

நீலம்சுமக்கும் கடலே...!
தினமும் நீ கரையாதே...
கைகட்டி கண்மூடி
மௌனம் கொள்...

ஞாலத்தைநிறைத்த நீரே...!
ஓரிடத்தில்நீ நிலைக்காதே...
வரண்ட பூமிக்கும்
ஒருமுறை வந்துபோ...

பகுத்தறிவுள்ள மனிதனே...!
எனக்கு நீயொரு
சத்தியம் செய்துதா...
புனிதனாய் புவியினில்
வாழ்வேன் என்று...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி வாங்கிவா..!

கொடுமைகள் மண்ணில் சாகாதோ
கொடியவர்கள் மனமும் மாறாரோ
படுதுயர் இனியும் ஓயாதோ—புவியில்
பசியும் பிணியும் தீராதோ...?

வன்முறைகள் நிலைத்து வாழுவதும்
வல்லமைலியிருந்தும் சிலர் மாழுவதும்
சொல்லொணாத மனத்துயரமம்மா—இனி
சுகமெங்கு புவியினில் தேடுவதோ...?

திசையெங்கும் எரியும் தீக்கொழுந்து
தீமைகள் பதுங்கியே வாழுமங்கு
பசையுள்ளோர் செழித்துவாழுகிறார்—ஏழை
பழசுமின்றி தினமும் வாடுவதோ...?

வலியவர் வழமுடன் ஆழுகின்றார்
எளியவர் மெலிந்தே வாடுகிறார்
மலிவாக எங்கும் அழிவதெல்லாம்—நம்
மக்களின் மாசற்ற உயிர்கள்தானோ...?

தெருவெல்லாம் மனிதப்பிணக்குவில்
தேவையோ பலருக்குப் பணக்குவியல்
உருவினை மாற்றியெங்கோ—பெண்ணை
உமிழ்ந்து காறித்துப்புத்துப்புவதோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிசெல்லும் எங்கள் பாலகர்கள்
படையினரின் பாதுகாப்பு அரண்கள்
வெள்ளியும் அடிவானில்முளைத்திடாதோ—இதை
வெளியுலகம் விழித்தே பார்த்திடாதோ...?

தமிழர்கள் தமையுணர்ந்து சேராரோ
தலையினை நிமிர்த்தியே இதைப்பாராரோ
கமழுகின்ற சாதிமதப்பிரிதன்னை—மனதில்
களைந்துகவிழ்த்திட உறுதிபூணாரோ...?

உரிமையினை துணிந்துவந்து கோளாரோ
உளமொத்து உணர்ந்தேசேர்ந்து வாராரோ
மரித்திடுகின்ற மாந்தரைத்தடுத்திட—நல்ல
மகிழ்ச்சியினை வாங்கி ஊட்டாரோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்கதவுதிறக்கும்.

அடி பெண்ணே...!
உன்னை நீயே
புடம்போட்டுக்கொள்...!
இப் பூவுடல்—
பூதவுடல் ஆவதற்குள்
பூவுலகில் பெண்கள்
புழுங்கி மழுங்குவதேன்...?
மாதவம் செய்துதான்
மங்கையரைப் பெற்றனரோ...
இல்லை—இம்மண்ணில்
மாதவம் செய்துதான்
மங்கையர்—
நல்மாந்தராய் வாழமுடியுமோ...?
இது என்ன விந்தை...
எங்குமில்லாதபடி
தமிழ்பெண்களுக்கு மட்டும்
ஏனிந்தத் தலைவிதி...?
பண்பாடும் கலாச்சாரமும்
பெண்களுக்கு மட்டுமா
சொந்தமென்று சொன்னார்...?
ஆண் பிள்ளைகள்
அனைத்தையும் அடியோடு—
சாதித்துவிட்டு வந்து
அசந்து தூங்கலாமா...?
அடி பெண்ணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உரத்துக்கேள்...!
வழியொன்று பிறக்கும்...
இந்த நாட்டில் மட்டும்
ஏனிந்த அவலம்...?
இலட்சக் கணக்கில்
சீதனம்—சீர்வரிசைகள்...
பெண்களில் இச்சைகொண்டு
பிச்சைக்காரனைப் போல்
பின்னால் சுற்றுவதும்
காதல் வலைவீசுவதும்
கண்ணி வைப்பதுவும்
கன்னிகளையே விழுத்தும்நோக்கில்
மேடைகளில் ஏறி—
'பெண் விடுதலை' என்னும்
பல்லவி பாடுவதும்
வாடிக்கையாகிப் போனது...
இதில்வேடிக்கை எதுவெனில்,
பின்னாளில் மணமேடையில்
மணப்பெண்ணுக்கு முன்னர்—
பலர் தலைகுனிகின்றார்
அவருக்கும் நாணம்...
அது நாணயத்தால் வந்தது
சீதனத்தை முன்கூட்டி
செவ்வனே செருகிக்கொண்டானே...
அடி பெண்ணே...
நீ விழிப்பாயிரு...!
விட்டில் பூச்சியல்ல—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ விடிவெள்ளியாகு...!
உன் எதிர்காலத்தை
நீயே தீர்மானித்துக்கொள்...!
அதற்கான அத்திவாரத்தை
ஆழமாக இட்டுக்கொள்...!
திடமாகத் திட்டமிடுகின்ற
தைரியத்தை கூர்மைப்படுத்து...!
பெற்றோரின் பெறுபேறு
உனக்கு சாதகமாகட்டும்...
ஏனென்றால்,
பல சகோதரிகளுக்கு—
சாபங்களே வரமாய்
வந்து கிடைத்ததுண்டு...
நான் சொல்லும் வரம்—
வாளாய்வந்த வரன்களைத்தான்...
இந்த வாழ்வில்—நீ
சிக்கி சிதறவேண்டுமா...?
இதிலிருந்து விடுபட்டு
வெளியேறிட ஞானம்பெறு...!
நல்லவற்றைக் கண்டறி
ஞாலத்துப் பெண்களில்
நீ வேறாகி—
வெளிச்சம் போடு...!
காலம் உனக்குக்
கதவு திறந்துவிடும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயதானம்..

விழியால் ஒன்றானோம்—
காதல் மொழியால் ஒன்றானோம்...
உணர்வுகளால் ஒன்றானோம்—
உதிரவகையால் ஒன்றானோம்...
நினைவுகளாலும்—நித்திய
கருமங்களினாலும் ஒன்றானோம்...
உடல்கள் தனித்திருந்தும்
உயிர் ஒன்றென்றுணர்ந்தோம்...
இணைவோம் என்றிருந்தவேளை
இப்படி இடர்வருமென்று
யார் கண்டார்...?
இதயத்தில் ஓட்டைவிழுமென்று
யார் சொன்னார்...?
என்ன கொடுமையிது...?
என்னுயிரே... நீ வாழவேண்டும்...!
அதற்காகவேதான்—இந்தப்
புனித ஏற்பாடுகளெல்லாம்...
அன்பே... தயவுசெய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை புரிந்துகொள்வாயா...?
உன் அன்பனால்–உனக்கு
இதுகூட செய்யாவிட்டால்...?
உன் சத்திரசிகிச்சை–
வெற்றிபெற்று நீவாழ
ஆண்டவனை வேண்டிடத்தான்
நான் அவனிடமே போகிறேன்...
பூரண குணம்கண்டபின்
இம்மடலை உன்னிடம்–
ஒப்படைக்கவேண்டும் என்று
அந்த வைத்தியநிபுணரிடம்
மன்றாடிக் கேட்டிருக்கிறேன்...
நீ..., என்னுயிரே–என்னுயிரே
என்றுதானே அடிக்கடிவிழிப்பாய்...
பாதியுயிராய்–காலமெல்லாம்
நீ பரிதவிக்கக்கூடாதல்லவா...?
அதனால்தான்–என்னுயிரை
உனக்குத்தந்து ஏகுகிறேன்...
என்னைத்தேடி நீ–
தோற்றுப்போவாய் என்பதில்
கவலைதான் எனக்கு...
என்றாலும், நீ நீடுவாழ்வாய்–
என்றதேற்றத்தால்–நான்
மனநிறைவோடு உன்னிடம்
விடைகேட்கிறேன்–என்னுயிரே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பதிப்பாக-
வெளிவந்திருக்கிறது...

# தீயின் வார்ப்புகள்




பெற்றுக்கொள்ளவிரும்புபவர்கள்-

A.PUVANENTHIRAN
Lehrer strasse 20
47167 Duisburg

என்றமுகவரியோடு தொடர்புகொள்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வெளிவரவிருப்பது...

**அம்பலவன்புவனேந்திரனின்**

# முடிவல்ல... ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org